1981 ஜனவரி 30]

காக மட்டும் அல்லாமல் நான் ஏற்கெனவே சொன்னபடி சிட்டோட்ரா லெமன் கிராஸ் போன்ற பொருட்களைப் பயிர் செய்து அவற்றிலிருந்து என்ணெய் எடுத்தல் போன்றவற்றிற்குக் கூட பல கோடி ரூபாய் தர முன்வந்தும் கூட அந்தப் பலனைப் பெற முடியாத அளவுக்கு பெரிய விவசாயிகள் வாங்கிய கடனை கட்டாமல் இருக்கின்ற காரணத்தால்தான் இந்த அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம், பெரும் விவசாயிகள். நிலவள வங்கிகளிலிருந்து பெற்று நிலுவையாக வைத்திருக்கும் 80, 90 சதவீத கடனை, திருப்பிச் செலுத்தும் வகையில் உறுதுணையாக நிற்பார்களேயானால், நிச்சயமாக கிராமப்புற பொருளாதாரத்தை நாம் செம்மை படுத்தமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[முற்பகல் 10—30]

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. தகவல் கோரல்.

(அ) விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு மௌன அஞ்சலி; அவை ஒத்திவைப்பு—

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் நான் இந்தப் பிரச்னையை எழுப்ப முயன்ற போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் வந்து விடட்டும் என்று சொன்னீர்கள். இப் பொழுது அநேகமாக எல்லாக் கட்சித் தலைவர்களும் இருக் கிறார்கள். இன்று நாட்டின் பாதுகாப்புக்காக உயிர் நீத்த தியாகிகளின் தினம். தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர் களின் நினைவு நாள். தீண்டாமை ஒழிப்புக்கு நாம் அனை வரும் உறுதியெடுத்துக் கொள்ளும் நல்ல நாள். இந்த நன்னாளில் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமும் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் இடத்திற்குச் சென்று தீண்டாமை ஒழிப்புக்கு உறுதி எடுத்துக்கொள்ள வகை செய்யும் முறையில், இப்பேரவையை 10.45லிருந்து 11.15 வரை ஒத்தி வைக்க வேண்டும் என்று தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை இக்கருத்தை ஒரு மனதாக ஏற்றுக் கொள்வதால், பேரவை 10.45— லிருந்து 11.15 வரை ஒத்திவைக்கப் பெறும்.